2010 மே 6] [திரு. தா.மோ. அன்பரசன்]

இதுபோன்ற துயரச் சம்பவங்கள் வருங்காலங்களில் நடைபெறாமல் தடுக்க அனைத்துத் தொழிற்சாலைகளிலும் கழிவு நீர்த் தொட்டிகளில் இறங்கிப் பணி செய்யும்போது, துப்புரவுத் தொழிலாளர்கள் பாதுகாப்பாகப் பணிபுரிய மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து தொழிற்சாலை நிர்வாகங்களுக்குத் தொழிற்சாலை ஆய்வகத் துறை அறிவுரை வழங்கியுள்ளது என்பதை மாமன்ற உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியம்பாடியில் நடைபெற்ற துயரச் சம்பவம் குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துகளோடு நானும் ஒத்துப் போகிறேன் என்பதை எடுத்துக்காட்டி, இதுகுறித்துப் பேசிய அனைவருமே, இறந்துவிட்ட 5 தொழிலாளர்களுடைய குடும்பங்களுக்குத் தலா 5 இலட்சம் ரூபாய் தர வேண்டுமென்று கேட்டிருக்கின்றார்கள். ஏற்கெனவே அந்தத் தொழிற்சாலையின் சார்பாக 3 இலட்சம் ரூபாய் தருவதாகக் குறிப்பிட்டு, 85 ஆயிரம் ரூபாய் வரையிலே இதுவரை தந்திருக்கிறார்கள். 5 இலட்சம் ரூபாய் அந்தக் குடும்பங்களுக்குக் கிடைக்கின்ற வகையில், எஞ்சியுள்ள தொகையை அரசின் சார்பிலே வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) மொத்தமாக அக்குடும்பங்களுக்கு 5 இலட்சம் ரூபாய் நிவாரணத் தொகை கிடைக்க வழி வகுக்கப்படும் என்பதையும், அந்தத் தொழிற்சாலை அதிபர்கள்மீதும், இந்தத் தவறுக்குக் காரணமானவர்கள்மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று குறிப்பிட்ட அந்தக் கோரிக்கையையும் அரசு ஏற்றுக்கொண்டு, இந்தத் துறையின் சார்பாக என்ன நடவடிக்கை எடுக்க வேண்டுமோ, அந்த நடவடிக்கையை நிச்சயமாக எடுப்போம் என்பதையும் திட்டவட்டமாக நான் இங்கே குறிப்பிடுகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

2. தகவல் கோரல்—தொடர்ச்சி

(ஆ) பள்ளிகளில் மொழிச் சிறுபான்மையினர் தமிழை மட்டுமே கற்க வேண்டுமென தமிழக அரசு வற்புறுத்துவதாகப் பிரச்சாரம்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: தமிழ் கற்பிக்கப்படாத பள்ளிகளில், மாணவர்களை தமிழ் கற்க அரசு வற்புறுத்துகிறதென்றும், தமிழைத் தவிர பிற தாய்மொழிகளைக் கற்க அரசு